# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

# பெறுகை அறிவித்தல்

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (SLBFE) அலுவலகர்களுக்கு சீருடை/சீருடை துணிகளின் பெறுகை

## (Bid) No.- PR/02/11-1(2)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அலுவலகர்களுக்கு சீருடைகள் மற்றும் சீருடை துணிகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் செயற்படும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தல்களின் அட்டவணையின் விளக்கமானது வழங்கப்பட்டுள்ளது. வடிவமைப்பு, நிறம் மற்றும் சாரிகளின் துணி, சேர்ட்டுக்கள் மற்றும் காற்சட்டை துணிகள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள அலுவலக சீருடைக்காக பொருந்தக்கூடியதுமானதும் விலைமனு ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்காக அலுவலக ஆடைகளுக்காக பொருந்தக்கூடியதுமான சாரி வடிவமைப்பானது வழங்குநரினால் வழங்கப்படல் வேண்டும்.

| | விளக்கம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1. | நீண்ட காற்சட்டை துணி | 2215 மீற்றர்கள் |
| 2. | சேர்ட்டுக்கள் - நீண்ட கை | 1704 |
| 3. | சேர்ட்டுக்கள் - கட்டைக் கை | 954 |
| 4. | சாரிகள் | 3480 |

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து நடத்தப்படுமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள தகைமைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிகளில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234 ஆம் இலக்கத்தின் 2 ஆம் மாடியின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக (இவெவேப) பெறுகைக்கான முகாமையாளரிடமிருந்து பெற்று 2023.11.13 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து 2023.12.04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மேலேயுள்ள முகவரியிலுள்ள இவெவேப இன் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். தொலைபேசி: 011-2887585. மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

2023.11.13 ஆம் திகதியிலிருந்து 2023.12.04 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் காசாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500 ரூபாவை செலுத்திய பின்னர், விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கும் நிறுவனத்திலிருந்து விலைமனுக்கோரலின் நிறுவனத்தின் வியாபார பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதியொன்றுடன் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், இவெவேப பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் நிபந்தனையற்றதும் கோரும்போது பெற்றுக் கொள்ளக்கூடியதுமான 500,000 ரூபா பெறுமதிக்கான உத்தரவாதப் பாங்கிலும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப் பிணையொன்றுடனும் விலைமனுக்களை வழங்கப்படல் வேண்டுமென்பதுடன் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுவின் மொத்தப் பெறுமதியின் 10% இற்கு நிகரான செயற்பாட்டு உத்தரவாதமொன்றையும் வழங்கல் வேண்டும். விலைமனுப் பிணை மற்றும் செயற்பாட்டு உத்தரவாதம் ஆகிய இரண்டும் இலங்கை செயற்படும் உரிமமுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் ''தலைவர் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்'' என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Uniforms/Uniform materials for the SLBFE Staff –PR/02/11-(2)" என அடையாளமிடப்பட்டு வேலைவாய்ப்பு பணியக 2 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டி (01) இல் 2023.12.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும். இலத்திரனியலூடாக அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர் அதே முகவரியில் விரைவாகவே திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.

2023.11.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு சிறிய மாநாட்டு அறையில் நடைபெறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றிற்கு விலைமனுதாரர் அழைக்கப்படுகின்றனர்.

திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரானவர் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன் எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினத்தையும் மீள்செலுத்துவதற்கான கடப்பாட்டை கொண்டிருக்க மாட்டார்.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இல.: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/தொலைநகல்: 011-2880550/2880564/2887585**
**மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

" அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம் "